[8th November 1966

2. The Servicing Corporation, Guindy, is one of the authorised stockists which distributes the scarce raw materials procured by it on the production of permits, etc., issued by the Director as stated above.

மூலப்பொருள்கள் பெறுவதற்குரிமையுள்ள தொழிலதிபர்கள் தட்டுப்பாடுள்ள அரிதான மூலப்பொருள்கள் வேண்டுமெனக் கேட்டு விண்ணப்பம் செய்துகொள்கின்றனர். தொழில்-வணிகத்துறையைச் சேர்ந்த நேரிடப் பணியாளர்கள் அவ்விண்ணப்பங்களை, தொழில்களின் நிச்சயிக்கப்பட்ட திறன், இதற்குமுன் அவைகளில் பயன்படுத்திய மூலப்பொருள்களின் அளவு இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தக்க பரிவுரைகளுடன் அவற்றைத் தொழில்-வணிகத்துறை நெறியாளருக்கு அனுப்புகின்றனர். நெறியாளர் இதற்கெனத் தமது அலுவலகத்தில் வைத்துள்ள பதிவேடுகளில் அவற்றைப் பதிவு செய்கிறார். இந்திய அரசிடம் இருந்து பங்களவு வந்தவுடன் இரும்பு உருக்குப் பொருள்களின் ஸ்டாக்கிஸ்டுகளுக்கும் இரும்புச் சாமான்கள் தயாரிப்பவர்களுக்கும் வழங்குவது பற்றி தமிழ்நாடு உருக்கு ஆலோசனை வாரியத்திடம் நெறியாளர் அறிவுரை பெறுகிறார். இவ்வாரியம் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டதாகும். தட்டுப்பாடுள்ள ஏனைய மூலப்பொருள் வழங்குதல் பற்றி தொடர்புள்ள ஏனைய தொழிலதிபர்களிடமிருந்து நெறியாளர் அறிவுரை பெறுசிறார். அதற்குப்பிறகு நெறியாளர், தமது அலுவலகப் பதிவேடுகளில் பதிவ செய்திருக்கிற விண்ணப்பதாரர்களுக்கு தட்டுப்பாடுள்ள மேற்படி மூலப்பொருள்களுக்குரிய அனுமதிச் சீட்டுகளையும் பங்களவுச் சான்றுகளையும் வழங்குகிறார். மேற்படி அனுமதிச் சீட்டுகளையும் பங்களவுச் சான்றுகளையும், வீதாசாரப்படி அல்லது இதற்குமுன் அவர்கள் பெற்ற பங்களவுகளின் சராசரி வீதப்படி மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள அளவையும் ஒவ்வொரு தொழிலுக்கும் இந்திய அரசு நிச்சயித்துள்ள முதலிடத்தையும் ஒட்டி வழங்குகிறார். இந்த அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றை அதிகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம் காட்டி, தொழிலதிபர்கள் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

2. கிண்டியிலிருக்கும் செரிவிசிங் கார்ப்பரேஷன் இருப்பு வைத்துக் கொள்ள அதிகாரம் பெற்ற நிறுவனமாகும். தட்டுப்பாடுள்ள மூலப்பொருள்களை அது கொள்முதல் செய்கிறது. பிறகு, மேற்கூறியவாறு நெறியாளர் வழங்கும் அனுமதிச் சீட்டு முதலியவற்றைக் காட்டினால் அது மூலப்பொருள்களை வழங்குகின்றது.

APPENDIX IX.

[*Vide* answer to Starred *Question* No. 524 at page 605]

The South Cuddalore District Development Council in its meeting held on 2nd November 1965, resolved to seek the opinion of the Dean of the Madras Medical College to prohibit the sale of Ayurvedic medicine 'Madhugasam' to the public and then to address the Government if necessary, to ban the sale of the medicine to the public. Accordingly the opinion of the Dean of the Madras Medical College was sought by the Collector of South Arcot. The Dean placed the matter before the Central Board of Indigenous Medicine, Madras at the meeting held on 7th February 1966. The Board resolved to request the Government to take suitable action to prohibit Ayurvedic preparations coming under the denomination of Asavas and Arishtas and being presented by any name except on the prescription of a registered practitioner of Indigenous Medicine only to be sold by licensed pharmacies. This resolution has not so far been communicated to the

8th November 1966]

Government. However, the Government of India have been addressed separately to frame suitable rules under the Drugs and Cosmetics Act to regulate the manufacture, sale and distribution of Madhugasam. Their decision is awaited.

(அ) & (இ) "மதுகாசம்" என்னும் ஆயுர்வேத மருந்து பொது மக்களுக்கு விற்பனை செய்யப் படுவதைத் தடை செய்வது குறித்து சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரின் யோசனையைக் கேட்பதென்றும், பின்னர் அவசியமானால் அந்த மருந்து பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடை செய்யுமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதென்றும் தென்கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றம், 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் தேதி நடைபெற்ற தனது கூட்டத்தில் தீர்மானித்தது. அதன்படி, தென் ஆற்காடு மாவட்டக் கலெக்டரால் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் அது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டது. கல்லூரி முதல்வரால் இவ் விஷயம் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ந் தேதி நடைபெற்ற சென்னை நாட்டு மருத்துவ மத்தியக் கழகக் கூட்டத்தின் முன்பாக ஆலோசனைக்கு வைக்கப் பட்டது. ஆயுர்வேத முறையில், "அசவாஷ்டம்", "அரிஷ்டம்" என்னும் பெயர்களில் தயாரிக்கப்பட்டு வரும் மருந்துகளை, பதிவு பெற்ற நாட்டு மருத்துவரின் மருந்துக் குறிப்புச் சீட்டின் பேரில், உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தவிர மற்றப்படி எவ்வகையில் விற்கப்பட்டாலும் அவற்றைத் தடை செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதென மேற்படி மருத்துவக் கழகம் தீர்மானித்தது. இதுவரை அத்தீர்மானம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆயினும், "மதுகாசம்" என்னும் மருந்தைத் தயாரிப்பது, விற்பனை செய்வது, வழங்குவது ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டு மருந்துச்சரக்குகள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தக்க விதிகள் இயற்றுமாறு இந்திய அரசுக்குத் தனியே கடிதம் எழுதப் பட்டுள்ளது. இது குறித்து, மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

APPENDIX X.

[*Vide* answer to Starred Question No. 526 at page 607.]

Number of sterilisation operations performed in 1964–65

	Name of District.	Number of Operations.
	(1)	(2)
1	North Arcot	2,485
2	South Arcot	1,994
3	Chingleput	190
4	Coimbatore	1,975
5	Kanyakumari	2,805
6	Madurai	4,240
7	The Nilgiris	791
8	Ramanathapuram	4,072
9	Salem	1,922
10	Thanjavur	5,525
11	Tiruchirappalli	1,323
12	Tirunelveli	645
13	Madras City	8,802
	Total	36,769